# இல்லற வாழ்க்கை

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# இல்லற வாழ்க்கை

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. இல்லற வாழ்க்கை | 1 |
| 2. அரக்கன் அரக்கியோடு வாழ்வது போல | 17 |
| 3. தேவன் அரக்கியோடு வாழ்வது போல | 20 |
| 4. அரக்கன் தேவியோடு வாழ்வது போல | 25 |
| 5. தேவன் தேவியோடு வாழ்வது போல | 29 |

# இல்லற வாழ்க்கை

## 1. இல்லற வாழ்க்கை

இல்லற வாழ்க்கை இனிதே நடைபெற, திருவள்ளுவரும் பகவான் புத்தரும் அருளியவற்றைத் தொகுத்து விளக்கும் நூல் இது.

பகவான் புத்தரும் திருவள்ளுவரும் செய்ய முடியாததைச் செய்யுங்கள் என்று இந்த உலகிற்குச் சொல்லவில்லை. மனிதர்களால் நடக்க முடியாத ஒரு பாதையைக் காண்பித்து, இதில் நடவுங்கள் என்று சொல்லவில்லை. எதை மனிதர்களால் செய்ய முடியுமோ அதைத்தான் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். எந்த ஒரு வழி மனிதர்களால் நடக்க முடியுமோ அந்த வழியில்தான் மனிதர்களை நடவுங்கள் என்று சொல்கிறார்கள். ஏன்? அவர்கள் வழி நடந்தால் நன்மைகள் வரும். அவர்கள் வழியை மறந்தோருக்குத் துன்பம்தான் வரும்.

இதைத்தான் பகவான் புத்தரும் இவ்வாறு கூறுகின்றார்:

அறம் அறிந்து, நற்செயல்கள் செய்து வாழுங்கள். அறம் அறிந்து, நற்செயல்கள் செய்து வாழ முடியாவிட்டால்,

அறம் அறிந்து நற்செயல்கள் செய்து வாழுங்கள் என்று இவ்வுலகிற்கு உபதேசம் செய்யமாட்டேன்.

அறம் அறிந்து, நற்செயல்கள் செய்து வாழ்வதனால் நன்மைகள் வருமென்பதால், அறம் அறிந்து, நற்செயல்கள் செய்து வாழுங்கள் என்று இவ்வுலகிற்குச் சொல்கிறேன்.

பாவங்கள் செய்யாதீர்கள்; பாவங்கள் செய்வதால் துன்பங்கள் வரும். பாவங்கள் செய்யாமல் மனிதர்கள் இவ்வுலகில் வாழ முடியாதென்றால், பாவங்கள் செய்யாதீர்கள் என்று இவ்வுலகிற்கு உபதேசம் செய்யமாட்டேன்.

பாவங்கள் செய்யாமல் இவ்வுலகில் வாழ முடியும். ஆதலால் பாவங்கள் செய்யாதீர்கள் என்று உபதேசம் செய்கிறேன்.

பாவங்கள் செய்து வாழ்வதால் நன்மைகள் வருமாயின், பாவங்கள் செய்யாதீர்கள் என்று இவ்வுலகிற்கு உபதேசம் செய்யமாட்டேன். பாவங்கள் செய்வதால் துன்பங்கள் வரும். பாவங்கள் செய்வதால் இங்கும் துன்பம்; அடுத்த உலகிலும் துன்பம். ஆதலால் பாவங்கள் செய்யாதீர்கள் என்று உபதேசம் செய்கிறேன்.

சிலருக்குப் பகவான் புத்தரும் திருவள்ளுவரும் சொல்வதுபோல் வாழ முடியுமா? என்ற சந்தேகம் எழும். அந்தச் சந்தேகத்திற்குஉங்கள் உள்ளத்தில் இடம் கொடுக்கலாகாது. ஏன்?

பகவான் புத்தரும் திருவள்ளுவரும் எதை மனிதர்களால் செய்ய முடியுமோ அதைத்தான் செய்யுங்கள் என்று வலியுறுத்தியுள்ளார்கள். எந்த வழியில் நடக்க முடியுமோ, அதில்தான் நடக்குமாறு அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவர்கள் வழி நடந்தோருக்கு நன்மைகள் வரும். ஆனால், அவர்கள் வழி மறந்தோருக்குத் துன்பங்கள்தான் வரும்.

இல்வாழ்க்கை என்பது, கணவன் மனைவி இருவரும் கூடிக் குடும்பம் நடத்தக்கூடிய ஒரு வாழ்க்கை. இல்வாழ்க்கை இனிதே நடைபெற வேண்டுமானால், கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் அன்புடன் நேசித்து, அறம் அறிந்து, இல்வாழ்க்கைக்குரிய நல்ல பண்புகளுடன், ஒற்றுமையாக ஒருமனதுடன், குடும்பம் நடத்தினால்தான் இல்லற வாழ்க்கை இனிதே நடைபெறும் என்று பகவான் புத்தரும் திருவள்ளுவரும் கூறியுள்ளார்கள்.

திருவள்ளுவர் இல்வாழ்க்கையின் சிறப்பை இவ்வாறு விளக்கியுள்ளார்:

**அன்பும் அறனும் உடைத்தாயின் - இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் அன்புடன் நேசித்து, அறம் அறிந்து வாழ வேண்டும் என்று கூறிய திருவள்ளுவர், இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது என்றார். அதாவது, கணவன் மனைவி இருவரிடமும் அன்பும் அறமும்

இருப்பதால், இல்லற வாழ்க்கைக்கு உரிய நல்ல பண்புகள் இவர்களிடம் வந்து சேரும்.

நல்ல குணங்கள், நல்லொழுக்கம், பொறுமை, வெட்கம், பக்தி, வணக்கம், தானம், நற்செயல்கள் போன்ற நற்பண்புகள் இவர்களிடம் வந்து சேரும்.

ஆகவே திருவள்ளுவர், இல்லற வாழ்க்கையை அறம், அன்பு, நல்ல பண்புகள் என்ற செல்வங்களைத் தேடுவதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாகக் கருதி, அந்தச் செல்வங்களைத் தேடுவதையே ஒரு குறிக்கோளாக அமைத்து, வாழவேண்டும் என்று கூறியிருக்கின்றார்.

இவ்வாறு கணவனும் மனைவியும் வாழ்ந்தார்கள் என்றால் அவர்களுடைய வாழ்க்கை மங்கலகரமாக இருக்கும். அதைத்தான் திருவள்ளுவர் “பயனும் அது," என்று கூறியிருக்கின்றார்.

இல்வாழ்க்கை வாழ்வோரின் மனத்தில் அன்பு இல்லாவிட்டால், அந்த இல்லற வாழ்க்கை சிறப்பானதாக அமையாது. கணவன் மனைவி இருவர் உள்ளத்திலும் அன்பு இருக்க வேண்டும். அன்பு இருந்தால்தான் அறம் இருக்கும். அறம் இருந்தால்தான் பண்புகள் இருக்கும்.

அன்பில்லாத இருவர் வாழும் வாழ்க்கை, மங்கலகரமாக இருக்க வேண்டும் என விரும்புவது, பாலைவனத்தில் பட்டுப் போன ஒரு மரம் மீண்டும் தழைக்க வேண்டும் என எதிர்பார்ப்பது

போல்தான். ஏன்? நிலமோ பாலைநிலம்; மரமோ பட்டுவிட்டது; இனி அது எப்படித் தழைக்கும்?

அதுபோல, உள்ளத்தில் அன்பு இல்லாமல் இல்வாழ்க்கை வாழ்வோரின் வாழ்க்கை, மங்கலகரமாக இருக்க வேண்டும் என விரும்புவது, அந்தப் பாலை வனத்தில் உள்ள பட்டுப் போன மரம் மீண்டும் தழைக்க வேண்டும் என எதிர்பார்ப்பது போல்தான் ஆகும். அது நடக்காது.

இதையே திருவள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார்:

**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்ந் தற்று.**

அதாவது, உள்ளத்தில் அன்பு இல்லாமல் இருவர் கூடி, இல்வாழ்வு நடத்தக்கூடிய வாழ்க்கை, "எங்கள் வாழ்க்கை மங்கலகரமாக இருக்க வேண்டும்," என்று விரும்புவது, அந்தப் பாலைவனத்தில் உள்ள பட்டுப் போன மரம், மீண்டும் தளிர வேண்டும் என்று எதிர்பார்ப்பது போல்தான்.

அடுத்து, இல்வாழ்க்கை வாழக்கூடியவர்கள், நற்செயல்கள் செய்ய வேண்டும். அவர்கள் ஆதரவற்றோருக்கு ஆதரவு தந்து, அனாதைகளுக்கு உதவி செய்து, ஏழை எளியோருக்கும் உலகைத் துறந்து வாழ்வோருக்கும் ஆதரவளித்து, துன்புற்றோரின் துன்பங்களைப் போக்கி, தானங்கள் போன்ற நற்செயல்கள் செய்து வாழ வேண்டும். ஏன்? அவை இல்லற வாழ்க்கைக்குரிய நல்ல பண்புகள் ஆகும்.

இதையே திருவள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார்:

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இரந்தாற்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.**

அதாவது, இல்லற வாழ்க்கை வாழ்பவர்கள் இந்த உலகத்தில் ஆதரவற்றோரையும் அனாதைகளையும் துன்புற்றோரையும் ஏழை எளியோரையும் உலகத்தைத் துறந்து வாழ்வோரையும் ஆதரித்து, நற்செயல்கள் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இல்லற வாழ்க்கை வாழ்வோருக்கு இந்தப் பண்புகள் மிக அவசியம் என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்.

இதனையே பகவான் புத்தரும் இவ்வாறு கூறியிருக்கின்றார்:

பகவான் புத்தர் இமய மலையை உவமையாகக் கூறியுள்ளார். இமய மலை ஆகாயமளவு உயர்ந்திருக்கும். அந்த இமய மலையின் சாரலில் அதன் பாதுகாப்பில் பலவகை மரங்கள் உயர்ந்து, தழைகளைப் பரப்பி, மிகவும் செழிப்பாக வளர்ந்திருக்கும். அந்த இமய மலை எவ்வாறு உயர்ந்திருக்கின்றதோ அதுபோல, இல்லறத் தலைவன் அல்லது குடும்பத் தலைவன், அன்பிலும் அறத்திலும் நல்ல பண்புகளிலும் உயர்ந்திருக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார்.

இமய மலையைப் போல, அன்பிலும் அறத்திலும் நல்ல பண்புகளிலும் நற்செயல்கள் செய்வதிலும் பக்தியிலும் இல்லறத் தலைவன் உயர்ந்திருக்க வேண்டும்.

இத்தகைய இல்லறத் தலைவனைப் பார்த்து, அவன் மனைவியும் பிள்ளைகளும் நண்பர்களும் அவ்வழி நடக்க வேண்டும்.

அதாவது, மற்றவர்களும் அவனைப் பார்த்து, அன்பிலும் அறத்திலும் நல்ல பண்புகளிலும் உயர்ந்து வளரவேண்டும் என்று பகவான் புத்தர் கூறியிருக்கின்றார். அவ்வாறு அவர்கள் அவ்வழி நடந்தார்கள் என்றால், அந்தக் குடும்பத் தலைவனின் பாதுகாப்பில்; அந்தக் குடும்பத் தலைவனின் ஆதரவில், அந்தக் குடும்பம் மங்கலகரமாக இருக்கும்.

பகவான் புத்தர் இவற்றை உங்கள் ஞாபகத்தில் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்:

குடும்பத் தலைவனிடம் அன்பு, அறம், நற்பண்புகள், இருக்க வேண்டும்.

மனைவியிடமும் அன்பு, அறம், நற்பண்புகள் இருக்க வேண்டும்.

பிள்ளைகளிடமும் அன்பு, அறம், நற்பண்புகள் இருக்க வேண்டும்.

இவர்கள் கூடிப் பழகும் நண்பர்களிடமும் அன்பு, அறம், நற்பண்புகள் இருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் அந்த இமய மலையின் பாதுகாப்பில், அதன் சாரலில் பலவகை மரங்கள் உயர்ந்து, செழிப்பாக வளர்ந்துள்ளது

போல், இந்த இல்லறத்தான் பாதுகாப்பில், ஆதரவில் இவர்கள் இனிதே வாழலாம் என்று பகவான் புத்தர் கூறியுள்ளார்.

அறவழியில் இல்வாழ்க்கை வாழ்வோர், தாம் கற்ற அறத்தையும் தாமறிந்து வாழக்கூடிய பக்தி வாழ்வையும் மற்ற இல்வாழ்க்கை வாழ்வோருக்கு உபதேசிக்க வேண்டும். தாமும் அறத்தில் உறுதியாக நின்று, தாம் கற்ற அறத்தை, தாம் நடந்து செல்லும் பக்தி வழியை மற்றவர்களுக்கும் உபதேசித்து அவர்களும் அவ்வழியில் நடப்பதற்கு ஆதரவு தரவேண்டும். இதுவும் இல்லற வாழ்க்கை வாழ்வோருக்குள்ள சிறந்த பண்பாகும்.

திருவள்ளுவரும் இல்வாழ் மக்கள் பின்பற்ற வேண்டிய அறத்தைஇவ்வாறு கூறியிருக்கின்றார்:

**ஆற்றின் ஒழிக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து.**

தான் கற்ற அறத்தில் தாமும் உறுதியாக நின்று, மற்றவர்களுக்கும் அந்த அறவழியை உபதேசித்து, அவர்களும் அந்த அறவழியில் நடப்பதற்குத் துணைநின்று, நற்செயல்கள் செய்து வாழ்வோரின் இல்வாழ்க்கை தவபலம் உள்ளது என்று திருவள்ளுவர் உரைத்திருக்கின்றார்.

எப்படித் தவபலம் உடையது?

அறம் அறிந்து, துறவு பூண்டு தவவாழ்க்கை வாழும் ஒருவரின் தவம் வலிமை வாய்ந்தது. எப்படி அவருடைய தவம் வலிமை

வாய்ந்ததோ, அதுபோல் இல்லற வாழ்க்கை வாழ்வோர் ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும் தாமும் அறத்தில் உறுதியாக நின்று, தாம் கற்ற அறத்தை மற்ற இல்வாழ் மக்களுக்கும் உபதேசித்து, அவர்களும் அவ்வழி நடப்பதற்குத் துணை நின்று வந்தார்கள் என்றால், இவருடைய வாழ்க்கை, உலகைத் துறந்து அறநெறி அறிந்து தவவாழ்க்கை வாழும் ஒரு துறவியின் பக்தி எத்துணை தவவலிமை உடையதோ, அது போல இவர்களுடைய இல்வாழ்க்கை தவவலிமை உடையது என்கிறார் திருவள்ளுவர்.

பகவான் புத்தரும் இல்லற வாழ் மக்கள் பின்பற்ற வேண்டிய அறத்தை இவ்வாறு விளக்கியுள்ளார்:

தானத்தில் மிகச் சிறந்த தானம், நற்செயலில் மிகச் சிறந்தது எதுவென்றால், அறத்தை மறந்து வாழ்வோருக்கு, அறத்தை உபதேசம் செய்வதும் பக்தியில்லாமல் வாழ்வோருக்கு உள்ளத்தில் பக்தியை வளர்ப்பதும், தானத்தில் சிறந்த தானம் என்றும் நற்செயலில் சிறந்த நற்செயல் என்றும் பகவான் புத்தர் கூறியுள்ளார்.

இவ்வாறு இல்லற வாழ்க்கை வாழ்வோருக்கு உலகத்தில் புகழ் கிடைக்கும்.

எப்படி அவர்களை உலகம் புகழும்?

மேற்கூறியவாறு எவர் ஒருவர் வாழ்கின்றாரோ, ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும் அவர்களை இவ்வுலகம்

தெய்வலோகத்திலுள்ள தேவர்களைப் போல் மதித்து, தங்கள் மத்தியில் ஒரு தேவனே வாழ்கிறான் என்று அவர்களைப் புகழ்வார்கள். இத்தகைய இல்லற வாழ்விற்கு அத்துணைப் புகழ் உண்டு.

திருவள்ளுவரும் அறம் அறிந்து இல்வாழ்க்கை வாழ்பவனுக்குப் புகழ் வரும் என்று இவ்வாறு கூறியிருக்கின்றார்:

> **வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
> **தெய்வத்துள் வைக்கப் படும்.**

உலகில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகிலுள்ள தெய்வங்களுக்குச் சமமாக மதிக்கப் படுவான்.

ஒருமுறை பகவான் புத்தரின் சீடர் ஆனந்தா, பகவான் புத்தரிடம் சென்று இவ்வாறு கேட்டார்:

> "பகவான், மலர்களின் இனிய மணம் காற்றோடு செல்லும்: காற்றுக்கு எதிராகச் செல்வதில்லை. இவ்வுலகில் காற்றோடும் காற்றுக்கு எதிராகவும் செல்லக்கூடிய மணம் எதுவும் உண்டா?"
>
> "உண்டு ஆனந்தா," என்று கூறியபின் பகவான் புத்தர் இவ்வாறு பதிலளித்தார்:

"ஆனந்த, இங்கு ஒரு கிராமத்திலோ அல்லது பட்டணத்திலோ, இல்வாழ்க்கை வாழ்வோர், கணவனாக இருப்பினும் மனைவியாக இருப்பினும் அவர் அன்பும் அறனும் நல்ல பண்புகளுடன், நற்செயல்கள் செய்து, நல்வாழ்வு வாழ்வார்களாயின், அவர்களுடைய அன்பையும் அறத்தையும் பண்பையும் பார்த்து உலக மக்கள் அவர்களைப் புகழ்வார்கள்.

மற்ற இல்வாழ்க்கை வாழ்வோரும் துறவு வாழ்க்கை வாழ்வோரும் தெய்வலோகத்துத் தேவர்களும் அவர்களைப் புகழ்வார்கள். இந்தப் புகழ் காற்றோடும் செல்லும்; காற்றுக்கு எதிராகவும் செல்லும். இந்தப் புகழ் நான்கு திசைகளிலும் செல்லும். இந்தப் புகழ் என்ற மணம் காற்றோடும் செல்லும்; காற்றுக்கு எதிராகவும் செல்லும்," என்று பகவான் புத்தர் விளக்கினார்.

இல்வாழ்க்கை வாழ்வோர் எவ்வாறு வாழவேண்டுமோ அவ்வாறு வாழ்ந்தால், அவர்களுடைய புகழ் நான்கு திசைகளிலும் செல்லும். அதுமட்டுமின்றி, தெய்வலோகத்திலுள்ள தேவர்களும் அவர்களைப் புகழ்ந்து பேசுவார்கள் என பகவான் புத்தர் கூறியுள்ளார்.

கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, ஒற்றுமையாகக் குடும்பம் நடத்தினால்தான் இல்வாழ்க்கை இனிதே நடைபெறும். இருவரிடமும் ஒற்றுமை இல்லையாயின், ஒருவர் மட்டும் அறத்தை பின்பற்றிக் குடும்பத்தை நடத்தினால் அந்த இல்வாழ்க்கை இனிதே

நடைபெறாது. இதை விளக்கவே பகவான் புத்தர் இவ்வலகில் நான்கு வகை இல்வாழ்க்கை உண்டு என்றார்.

எவை அந்த நான்கு வகை இல்லற வாழ்க்கைகள்?

**1. அரக்கன் அரக்கியோடு வாழ்வது போல.**

**2. தேவன் அரக்கியோடு வாழ்வது போல.**

**3. அரக்கன் தேவியோடு வாழ்வது போல.**

**4. தேவன் தேவியோடு வாழ்வது போல.**

இவ்வாறு நான்கு வகையான இல்லற வாழ்க்கை உண்டு என்று பகவான் புத்தர் விளக்கியுள்ளார்.

*************************************************************************

# 1. அரக்கன் அரக்கியோடு வாழ்வது போல.

அரக்கன் அரக்கியோடு வாழ்வது என்பது, கணவன் ஓர் அரக்கனைப் போல் குடும்பத்தில் வாழ்வான். மனைவி ஓர் அரக்கியைப் போல் குடும்பத்தில் வாழ்வாள். ஆகவே, பகவான் புத்தர் இவர்களை அரக்கன் அரக்கியோடு வாழும் இல்வாழ்க்கை என்று கூறியுள்ளார்.

அரக்கன் அரக்கியோடு வாழும் இல்வாழ்க்கை எப்படி இருக்கும்?

கணவன் மனைவி இரிவரிடமும் அன்பும் அறமும் இருக்காது. இல்லற வாழ்வுக்குரிய நல்ல பண்புகள் இருக்காது. இவர்களிடம் அறம் இல்லாததால் குற்றங்கள் பல இருக்கும்.

எம்மாதிரியான குற்றங்கள் இருக்கும்?

**திருட்டும் கொலையும் தவறான வழியில் காமத்தை நாடுவதும்**
**குடியும் பொய்யும் புறம் பேசுதலும் கடிந்து பேசுதலும்**

போன்ற குற்றங்கள் இவர்களிடம் இருக்கும்.

**இருவரிடமும் மனசாட்சி இருக்காது.**

**இவர்கள் பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சுவதில்லை.**

இவர்களிடம் நல்லனவற்றை அறிந்து நல்வழியில் நடப்பதற்கு 0
மனவுறுதி இருக்காது.

இருவரிடமும் நல்ல பழக்கங்கள் இருக்காது.

ஒழுக்கமும் தன்னடக்கமும் இருக்காது.

பணிவும் தன்னடக்கமும் வணக்கமும் இருக்காது.

பொறுமையும் வெட்கமும் இருக்காது.
இருவரிடமும் பொறுப்புணர்வும் கடமையுணர்வும் இருக்காது.

இருவரும் கோபக்காரர்கள்; கொடுமைக்காரர்கள்.

கணவன் மனைவிமேல் கோபம் கொள்வான்.

மனைவி கணவன்மேல் கோபம் கொள்வாள்.

ஒருவரையொருவர் இகழ்ந்து மனம் புண்படப் பேசுவார்கள்.

இவர்கள் ஒருவரையொருவர் நம்புவதில்லை.

கணவன் மனைவிக்குத் துரோகம் செய்வான்.

மனைவி கணவனுக்குத் துரோகம் செய்வாள்.

**இவர்கள் சேமித்துச் சிக்கனமாக வாழ்வதில்லை.**

**குடியும் சூதாடுதலும் போன்ற தீய பழக்கங்கள் இருவரிடமும் இருக்கும்.**

**இவர்கள் தீயோரின் நட்பை நாடி அவர்களைப் புகழ்வார்கள்.**

**நல்லோரைப் பகைத்து நன்றி மறந்து வாழ்வார்கள்.**

**இருவரிடமும் முறையான பக்தி இருக்காது.**

**அப்படியே பக்தி இருந்தாலும் அறத்தை மறந்து வாழ்வோரின் உபதேசத்தைப் போற்றித் தவறான வழியில் நடப்பார்கள்.**

**இவர்கள் பெரியோரை வணங்கி நல்லுபதேசங்களைக் கேட்கமாட்டார்கள்.**

**இவர்கள் பெற்றோருக்குச் சேவை செய்யமாட்டார்கள்.**

**உறவினர்களைப் பகைத்துக் கொள்வார்கள்.**

**இருவரிடமும் தானம், நற்செயல்கள், நற்பண்புகள் இருக்காது.**

**இவர்களுடைய வாழ்க்கை விலங்குகள் ஒன்றையொன்று கடித்துக் கொள்வதுபோலத்தான் இருக்கும்.**

**இங்கும் இவர்களுடைய வாழ்க்கை துன்பம்.**

**உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் அடுத்த உலகிலும் இவர்களுக்குத் துன்பமே.**

****** ****** ******

## 2. தேவன்அரக்கீயோடு வாழ்வது போல்.

தேவன் அரக்கியோடு வாழும் வாழ்க்கை என்பது, கணவன் ஒரு தேவனைப் போல் வாழ்வான். மனைவியோ, அரக்கியைப் போல் வாழ்வாள் என்று பகவான் புத்தர் கூறியுள்ளார்.

கணவன் தேவனைப் போல் வாழ்வான் என்பதன் பொருள் என்ன?

கணவனிடம் அன்பும் அறமும் இருக்கும். இல்வாழ்க்கைக்குரிய நல்ல பண்புகள் இருக்கும். மனசாட்சி இருக்கும். இவன் பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சுவான். நல்லனவற்றை அறிந்து நல்வழி நடக்கும் மனவுறுதி இவனிடம் இருக்கும்.

அதாவது, நல்ல குணமும் நல்ல ஒழுக்கமும் தன்னடக்கமும் பண்பும் பொறுமையும் வெட்கமும் வணக்கமும் இவனிடம் இருக்கும்.

சோம்பலைப் போக்கிக் குடும்ப மேம்பாட்டிற்காக உழைத்துப் பொருள் தேடி, சிக்கனமாகச் செலவு செய்து, சேமித்து வாழ்வான்.

தீயோரின் நட்பை நாடமாட்டான். நல்லோரை நாடி, நல்லோரின் நட்பை வளர்த்து, நன்றி மறவாமல் வாழ்வான்.

கணவனிடம் பக்தி இருக்கும். இவன் பெரியோரை வணங்கி, நல்ல உபதேசங்களைக் கேட்டு, நல்வழி நடப்பான்.

இவன் பெற்றோருக்குச் சேவை செய்து, உறவினர்களுடன் உறவை வளர்த்து, தானங்களும் நற்செயல்களும் செய்து வாழ்வான்.

கணவன் ஒரு தேவனைப் போல் வாழ்வான்; ஆனால், மனைவியோ ஓர் அரக்கியைப் போல் வாழ்வாள்.

**அரக்கியைப் போல் வாழ்வது என்றால் என்ன?**

இவளிடம் அன்பு இருக்காது. அறம் இருக்காது. இல்லற வாழ்வுக்குரிய நல்ல பண்புகள் இருக்காது.

இவளிடம் அறம் இல்லாததால் குற்றங்கள் இருக்கும். திருட்டும் கொலையும் தவறான முறையில் காமத்தை நாடுவதும் இவளிடம் இருக்கும்.

குடியும் பொய்யும் புறம் பேசுதலும் கடிந்து பேசுதலும் போன்ற

பல குற்றங்கள் இவளிடம் இருக்கும்.

இவளிடம் மனசாட்சி இருக்காது. இவள் பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சமாட்டாள்.

இவளிடம் நல்லனவற்றை அறிந்து நல்வழி நடக்கும் மனவுறுதி இருக்காது. நல்ல குணங்கள் இருக்காது. ஒழுக்கம், தன்னடக்கம், பணிவு, வணக்கம், பொறுமை, வெட்கம் ஆகியவை இருக்காது.

இவள் தன் பொறுப்பை உணர்ந்து, கடமையை உணர்ந்து, இல்லறம் நடத்தமாட்டாள்.

இவள் கணவனுக்கு அன்புடன் பணிவிடை செய்யமாட்டாள். இவள் கோபக்காரி, கொடுமைக்காரி.

கணவனிடம் கோபத்தைக் காட்டுவாள்; கடிந்து பேசுவாள்; மனம் புண்படப் பேசுவாள்.

இவள் பகட்டை விரும்பக் கூடியவள். இவளிடம் சிக்கனமும் சேமிப்பும் இருக்காது.

இவள் மற்ற ஆடவர்களை மனதில் விரும்பி, கணவனுக்குத் துரோகம் செய்யவும் அஞ்சமாட்டாள்.

இவள் தீயோரின் நட்பை நாடி அவர்களைப் புகழ்ந்து பேசுவாள். நல்லோரைப் பகைத்து, நன்றி மறந்து வாழ்வாள்.

இவளிடம் பக்தி இருக்காது. அப்படியே பக்தி இருந்தாலும் அறத்தை மறந்து வாழ்வோரின் உபதேசத்தைப் போற்றித் தவறான வழியில் நடப்பாள். இவள் பெரியோரை வணங்கி நல்லுபதேசங்களைக் கேட்கமாட்டாள்.

இவள் பெற்றோருக்குச் சேவை செய்யமாட்டாள். உறவினர்களைப் பகைத்து வாழ்வாள். இவளிடம் தானமும் நற்செயல்களும் இருக்காது.

இவள் இல்வாழ்வுக்குரிய நற்பண்புகளை மறந்து, ஓர் அரக்கியைப் போல் வாழ்வாள்.

தேவன் அரக்கியோடு வாழும் இல்வாழ்க்கையைத்
திருவள்ளுவர்
இவ்வாறு கூறியுள்ளார்:

> **மனைமாட்சி இல்லான்கண் இல்லாயின் வாழ்க்கை**
> **எனைமாட்சித் தாயினும் இல்.**

தன் மனைவி நற்குணங்கள் பொருந்தியவளாக இல்லையாயின், அந்த இல்வாழ்க்கையானது செல்வத்தால் எத்துணைப் பெருமையை உடையதாய் இருந்தாலும் பயன்ற்றது.

அதாவது, மனைவியிடம் நல்ல இல்வாழ்வுக்குரிய பண்பும் ஒழுக்கமும் இல்லையாயின், எவ்வளவு பெரிய மாடி வீட்டில் செல்வத்துடன் வாழ்ந்தாலும் அந்த வாழ்க்கை பயனற்றது என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்.

அங்கு மகிழ்ச்சி இருக்காது; இன்பம் இருக்காது; இல்வாழ்க்கை மங்கலகரமாக இருக்காது. ஏன்? மனைவி எதற்காக இல்வாழ்க்கையைத் தொடங்கினாளோ, அந்தக் குறிக்கோளிலிருந்து விலகிவிட்டாள்.

இத்தகைய வாழ்வு வாழ்வோரின் இல்வாழ்க்கையைத் திருவள்ளுவர் இவ்வாறும் கூறியிருக்கின்றார்:

**புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை.**

இல்வாழ்க்கையைப் புகழோடு வாழவேண்டும். வறுமையில் வாழ்ந்தாலும் புகழோடு வாழவேண்டும். செல்வத்தோடு வாழ்ந்தாலும் புகழோடு வாழவேண்டும். மனைவியானவள் ஒழுக்கமில்லாமல், பண்பில்லாமல், நற்குணமில்லாமல், புகழை விரும்பாதவளாய் இருந்தால், அவள் கணவனை இகழ்ந்து பேசும் பகைவர்முன் சிங்கம்போல் கம்பீரமாக நடக்க முடியாது என்று வள்ளுவர் விளக்கியிருக்கின்றார். ஆகவே, தேவன் அரக்கியோடு வாழும் இல்வாழ்க்கைக்குப் பெருமை இல்லை.

****** ****** ******

# 3. அரக்கன் தேவியோடு வாழ்வதுபோல்.

அரக்கன் தேவியோடு வாழும் வாழ்க்கை என்பது, மனைவி தேவியைப் போலும் கணவன் அரக்கனைப் போலும் வாழும் வாழ்க்கையாகும்.

**தேவியைப்போல் வாழ்வது என்பதன் பொருள் என்ன?**

மனைவியிடம் அன்பும் அறமும் இல்லற வாழ்வுக்குரிய நல்ல பண்புகளும் இருக்கும். இவளிடம் அறம் இருப்பதால், குற்றங்களைக் கண்டு அஞ்சி, தர்ம வழியில் நடப்பாள்.

இவளிடம் மனசாட்சி இருக்கும். இவள் பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சுவாள். இவளிடம் நல்லனவற்றை அறிந்து நல்வழியில் நடப்பதற்கு மனவுறுதி இருக்கும். இவளிடம் நல்ல குணம் இருக்கும்; ஒழுக்கம் இருக்கும்; அடக்கம் இருக்கும்; பணிவு இருக்கும்; பொறுமை இருக்கும்; நாணம் இருக்கும்; வணக்கம் இருக்கும்.

சோம்பலைப் போக்கி, குடும்ப மேம்பாட்டிற்காக உழைத்து, பொருள் தேடி, சிக்கனமாகச் செலவு செய்து, சேமித்து வாழ்வாள்.

இவள் தீயோரின் நட்பை நாடமாட்டாள். நல்லோரை நாடி, நல்லோரின் நட்பை வளர்த்து, நன்றி மறவாமல் வாழ்வாள்.

இவளிடம் முறையான பக்தி இருக்கும். இவள் பெரியோரை

வணங்கி, நல்ல உபதேசங்களைக் கேட்டு, நல்வழி நடப்பாள்.

இவள் பெற்றோருக்குச் சேவை செய்து, உறவினர்களிடம் உறவை வளர்த்து, தானம் செய்து, நற்செயல்கள் புரிந்து வாழ்வாள்.

ஆகவே இவள் ஒரு தேவியைப் போல் வாழ்வாள். ஆனால், இவள் கணவனோ, ஓர் அரக்கனைப் போல் வாழ்வான்.

**அரக்கனைப் போல் வாழ்தல் என்பதன் பொருள் என்ன?**

கணவனிடம் அன்பு இருக்காது; அறம் இருக்காது; இல்லற வாழ்விற்குரிய நல்ல பண்புகள் இருக்காது; இவனிடம் அறம் இல்லாததால், குற்றங்கள் பல இருக்கும்.

திருட்டு, கொலை, தவறான முறையில் காமத்தை நாடுவது, குடி, பொய், புறம் பேசுதல், கடிந்து பேசுதல் போன்ற குற்றங்கள் பல இவனிடம் இருக்கும்.

இவனிடம் மனசாட்சி இருக்காது. பழிக்கும் பாவத்திற்கும் இவன் அஞ்சமாட்டான். நல்லனவற்றை அறிந்து நல்வழி நடக்கும் மனவுறுதி இவனிடம் இருக்காது.

இவனிடம் நல்ல குணங்கள் இருக்காது; தன்னடக்கம் இருக்காது; பணிவு இருக்காது; பொறுமை இருக்காது; நாணம் இருக்காது; வணக்கம் இருக்காது.

இவன் பொருப்புணர்ந்து, கடமையுணர்ந்து இல்வாழ்வு வாழமாட்டான். இவன் மனைவியை நம்பித் தெளிவதில்லை. இவன் கோபக்காரன்; கொடுமைக்காரன்; மனைவியிடம் கோபத்தைக் காட்டுவான்; கடிந்து பேசுவான்; இகழ்ந்து பேசுவான்; மனம் புண்படப் பேசுவான்; மனைவியை அடிப்பான்; மனைவியைக் கொடுமைப் படுத்துவான்.

இவனைக் கண்டு மனைவியும் பிள்ளைகளும் அஞ்சி வாழ்வார்கள். மனைவியும் பிள்ளைகளும் பசித்திருக்க, இவன் தன் சுகத்தை நாடிப் போவான்.

இவனிடம் குடி, சூதாட்டம், மற்ற தீய பழக்கங்கள் இருக்கும். வெளியில் தன் பொருளைச் செலவு செய்வான். மற்ற பெண்களை மனத்தில் விரும்பி, மனைவிக்குத் துரோகம் செய்வான்.

இவன் தீயோரின் நட்பை நாடி, அவர்களைப் புகழ்வான். நல்லோரைப் பகைத்து, நன்றி மறந்து வாழ்வான்.

இவனிடம் முறையான பக்தி இருக்காது. அப்படியே பக்தி இருந்தாலும் அதை மறந்து வாழ்வோரின் உபதேசத்தைப் போற்றி, தவறான வழியில் நடப்பான்.

இவன் பெரியோரை வணங்கி, நல்ல உபதேசங்களைக் கேட்கமாட்டான். இவன் பெற்றோருக்குச் சேவை செய்யமாட்டான். உறவினர்களைப் பகைத்து வாழ்வான். இவனிடம் தானமும் நற்செயல்களும் இருக்காது. ஆகவே இவன் ஓர் அரக்கனைப் போல் வாழ்வான்.

**மனைமாட்சி இல்லான்கண் இல்லாதாயின் வாழ்க்கை**
**எனைமாட்சுத் தாயினும் இல்.**

என்று திருவள்ளுவர் மனைவிக்குக் கூறியாருந்தாலும் இக்குறள் கணவனுக்கும் பொருந்தும். கணவனிடம் இல்லறத்திற்குரிய நற்பண்புகள் இல்லையென்றால், அந்த இல்வாழ்க்கை, செல்வத்தால் எத்துணைப் பெருமை பெற்றிருந்தாலும் பயன்னறதே.

**புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை**

என்று திருவள்ளுவர் மனைவிக்குக் கூறியிருந்தாலும் இக்கருத்து கணவனுக்கும் பொருந்தும்.

அதாவது, கணவனிடம் இல்லற வாழ்வுக்குரிய நல்ல பண்புகள், ஒழுக்கம், அறம், அன்பு, இல்லையாயின் மனைவி, தன் பகைவர் முன் தலை நிமிர்ந்து நடக்க முடியாமல் அவமானத்தால் தலைகுனிவாள்.

ஆகவே, தேவி அரக்கனோடு வாழ்வது போன்ற இல்வாழ்க்கை இனிதே நடைபெறாது. கணவன் ஓர் அரக்கனைப் போல் வாழ்வதால், மனைவியும் பிள்ளைகளும் துன்பப் படுவார்கள். இவ்வாறான இல்வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்காது; இன்பம் இருக்காது.

****** ****** ******

# 4. தேவன் தேவியோடு வாழ்வது போல்.

தேவன் தேவியோடு வாழும் இல்வாழ்க்கை என்பது, கணவன் தேவனைப் போலவும் மனைவி தேவியைப் போலவும் வாழும் வாழ்க்கையாகும்.

## தேவன் தேவியோடு வாழும் இல்வாழ்க்கை என்பதன் பொருள் என்ன?

கணவன் மனைவி இருவரிடமும் அன்பும் அறமும் இல்வாழ்வுக்குரிய நல்ல பண்புகளும் இருக்கும்.

இவர்கள் இருவரிடமும் அறம் இருப்பதால், குற்றங்களைக் கண்டு அஞ்சி, அதர்ம வழியைக் கண்டு அஞ்சி, தர்மவழியில் நடப்பார்கள்.

இருவரிடமும் மனசாட்சி இருக்கும். இவர்கள் பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சுவார்கள். இவர்களிடம் நல்லனவற்றை அறிந்து நல்வழி நடக்கும் மனவுறுதி இருக்கும்.

இவர்கள் இருவரிடமும் அன்பு இருக்கும்; அறம் இருக்கும்; நல்ல குணம் இருக்கும்; பண்பு இருக்கும்; பணிவு இருக்கும்; தன்னடக்கம் இருக்கும்; பொறுமை இருக்கும்; நாணம் இருக்கும்; வணக்கம் இருக்கும்.

இருவரும் சோம்பலைப் போக்கி, குடும்ப மேம்பாட்டிற்காக உழைத்து, பொருள் தேடி, சிக்கனமாகச் செலவு செய்து,

சேமித்து வாழ்வார்கள்.

இவர்கள் ஒருவரை ஒருவர் அன்புடன் நேசித்து, ஒருவருக்கொருவர் மனத்தாலும் துரோகம் நினைக்காமல், ஒருவரையொருவர் முழுமையாக நம்பி, ஒற்றுமையாக இல்லற வாழ்க்கை நடத்துவார்கள்.

இவர்கள் தீயோரின் நட்பை நாடமாட்டார்கள். நல்லோரை நாடி, நல்லோரின் நட்பை வளர்த்து, நன்றி மறவாமல் வாழ்வார்கள்.

இருவரிடமும் முறையான பக்தி இருக்கும். இவர்கள் பெரியோரை வணங்கி, நல்ல உபதேசங்களைக் கேட்டு நல்வழி நடப்பார்கள்.

இவர்கள் பெற்றோருக்குச் சேவை செய்து, உறவினர்களுடன் உறவை வளர்த்து, தானங்கள் செய்து, நற்செயல்கள் செய்து வாழ்வார்கள். இதுவே தேவன் தேவியோடு வாழும் வாழ்க்கையாகும்.

இல்வாழ்க்கை என்பது தேவன் தேவியோடு வாழ்வதுபோல் இருக்க வேண்டும் என்று பகவான் புத்தரும் திருவள்ளுவரும் கூறியிருக்கின்றார்கள். அப்போதுதான், அந்த இல்வாழ்க்கை இனிமையாக நடைபெறும். இவ்வாறு வாழ்வோரின் இல்வாழ்க்கை மங்கலகரமாக இருக்கும். இவ்வாறு வாழ்வோரைத்தான் திருவள்ளுவர் அறவாழ்வு வாழ்பவர்கள் என்கிறார்.

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணீத் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்.**

அறத்துடன் இல்வாழ்க்கை வாழும் பெண்களின் சிறப்பை இவ்வாறு விளக்கியுள்ளார். கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு, தன் கணவனையும் அன்புடன் பாதுகாத்து, இருவரின் தகுதிக்கேற்ற புகழையும் காத்து, நற்பண்புகளுடன் நற்செயல்களைச் செய்து வாழ்பவளே பெண் என்கிறார் திருவள்ளுவர்.

தேவன் தேவியோடு வாழும் இல்லற வாழ்க்கையைத் திருவள்ளுவர் இவ்வாறு சிறப்பித்துக் கூறியுள்ளார்:

**ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து.**

இவர்களிடம் அறம், அன்பு, பண்பு, நற்செயல்கள், மற்றவர்களுக்கு அறத்தை உபதேசம் செய்யும் பண்பு , போன்றவை இருப்பதால், இவர்களுடைய இல்வாழ்க்கை மிகவும் தவபலம் உடையதாக அமைந்திருக்கும்

**எப்படி?**

அறநெறி அறிந்து, உலகைத் துறந்து தவ்வாழ்வு வாழும் துறவியின் தவம், வலிமை வாய்ந்ததாக இருக்கும். அதுபோல், இவர்களின் இல்லற வாழ்க்கை தவவலிமை உடையதாக இருக்கும் என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்.

தேவன் தேவியோடு வாழும் இல்வாழ்வைக் காற்றோடு செல்லும் மணம், காற்றுக்கு எதிராகச் செல்லும் மணம் போல் இவர்களுடைய புகழ் நான்கு திசைகளிலும் செல்லும் எனப் பகவான் புத்தர் கூறியிருக்கின்றார்.

மற்ற இல்வாழ்வு வாழும் மக்களும் துறவு வாழ்வு வாழ்வோரும் இவர்களைப் புகழ்வார்கள். அதுமட்டுமின்றி, தெய்வலோகத்துத் தேவர்களும் இவர்களைப் புகழ்வார்கள்.

ஆகவே, தேவன் தேவியோடு வாழ்கின்ற இல்லற வாழ்க்கைக்கு இங்கும் புகழ், அடுத்த உலகிலும் புகழ் என்கிறார் பகவான் புத்தர்.

பகவான் புத்தர் இவ்வாறு உபதேசம் செய்தபோது, அதைக் கேட்டுக்கொண்டிருந்த நகுலன் என்பவரும் அவர் மனைவியும் எழுந்து பகவான் புத்தரை மண்டியிட்டு வணங்கி, இவ்வாறு கூறினார்கள்:

"பகவான்! நான் என் மனைவியைத் திருமணம் செய்தபோது, அவளுக்கு வயது பதினாறு. அவளைத் திருமணம் செய்து வீட்டிற்கு அழ்ழைத்து வந்தேன். அன்றிலிருந்து நான் அவளுக்கு மனதாலும் துரோகம் செய்ததில்லை; உடலாலும் துரோகம் செய்ததில்லை. நாங்கள் இருவரும் அடுத்த பிறவியில் இணைந்து வாழ விரும்புகிறோம்."

நகுலனின் மனைவியும் எழுந்து, “பகவான்! அவர் என்னைப் பதினாறாம் வயதில் திருமணம் செய்து அழைத்து

வந்தார். அன்றிலிருந்து நான் அவருக்கு மனதாலும் உடலாலும் துரோகம் செய்ததில்லை. நாங்கள் இருவரும் அடுத்த பிறவியில் இணைந்து வாழ விரும்புகிறோம்,'' என்று பகவான் புத்தரிடம் கூறினாள்.

அதற்குப் பகவான் புத்தர், "கணவன் மனைவி இருவரிடமும் முறையான பக்தியும் அறமும் அன்பும் நற்செயல்களும் இருக்குமாயின், அடுத்த பிறவியிலும் அவர்கள் இணைந்து வாழலாம்," என்று கூறினார்.

பகவான் புத்தர் தொடர்ந்து, "தேவன் தேவியோடு வாழும் இல்லற வாழ்க்கை மங்கலகரமாக இருக்கும். அதைக் கண்டு பகைவர்கள் பொறாமைப் படுவார்கள். கணவன் மனைவி இருவரிடமும் அன்பும் அறமும் பண்பும் பக்தியும் இருப்பதால், பகைவர்கள் இவர்களுக்குத் தீங்கு விளைவிக்க முடியாது. உடலை விட்டு உயிர் பிரிந்தபின், இவர்கள் தேவலோகச் சிறப்பைப் பெறுவார்கள்," கூறினார்.

ஒரு முறை பகவான் புத்தர் ஒரு பூங்காவனத்தில் தங்கியிதபோது, அன்று இரவு, ஒரு தெய்வலோகப் பிறவி, பகவான் புத்தர் முன் தோன்றினார். அவர் உடல் ஒளி மயமாய்த் தோன்றியது. அவர் உடலில் இருந்து வெளிப்பட்ட ஒளியில் அந்தப் பூங்காவனமே வெளிச்சத்தில் மூழ்கியது.

அவர் பகவான் புத்தரை மண்டியிட்டு வணங்கியபின், எழுந்து நின்று, புத்தரிடம் இவ்வாறு கேட்டார்:

"பகவான் மங்கலகரமான வாழ்வு என்றால் என்ன? தெய்வலோகத்திலும் இதற்கு விளக்கம் கொடுக்கிறார்கள். தாங்கள் கூறுங்கள்; மங்கலகரமான வாழ்க்கை என்பது என்ன?"

பகவான் புத்தர் அந்தத் தெய்லோகப் பிறவிக்கு இவ்வாறு பதில் கூறினார்:

அறநெறி அறிந்து நல்வழி நடப்போர் நட்பை
நாடுவதும் அறத்தை மறந்து குற்றங்கள் செய்து
வாழும் மடையர்களை விட்டு ஒதுங்கி நிற்பதும்
மதிப்புக்குரியோரை மதிப்பதும்
இதுவே மங்கலகரமான வாழ்க்கைக்கு வழி.

வளமுள்ள நாட்டில் வாழ்வதும்
முற்பிறப்பில் நற்செயல்கள் செய்திருப்பதும்
அறம் அறிந்து நல்வழி நடப்பதும்
இதுவே மங்கலகரமான வாழ்வுக்கு வழி.

அறிவும் மிகுந்த கல்வியும் நல்லொழுக்கமும்
கட்டுப்பாடு உள்ள மனமும்
குற்றமில்லாச் சொற்களும்
இதுவே மங்கலகரமான வாழ்வுக்கு வழி.

தாய்க்கும் தந்தைக்கும் சேவை செய்வதும்
மனைவி பிள்ளைகளை அன்புடன் பாதுகாத்தலும்
மாசற்ற வாழ்க்கை வாழ்வதும்
இதுவே மங்கலகரமான வாழ்வுக்கு வழி.

தானம் செய்வதும் பக்தி வாழ்வு வாழ்வதும்
உற்றார் உறவினர்களிடம் நல்லுறவுகளை
வளர்த்தலும்
குற்றமற்ற செயல்கள் செய்வதும்
இதுவே மங்கலகரமான வாழ்வுக்கு வழி.

பாவச் செயல்களை ஒழிப்பதும்
போதைப் பொருள்களை அருந்தாமல் இருப்பதும்
நல்ல ஒழுக்க நெறியில் உறுதியாக இருப்பதும்
இதுவே மங்கலகரமான வாழ்வுக்கு வழி.

பணிவும் அடக்கமும் மனத்திருப்தியும்
நன்றி மறவா நெஞ்சமும்
தர்ம உபதேசங்களை முறையான காலங்களில்
கேட்பதும்
இதுவே மங்கலகரமான வாழ்வுக்கு வழி.

பொறுமையும் இனிய சொற்களும்
அறநெறி அறிந்து நல்வாழ்க்கை வாழும் நல்லோரை
நாடி,
நல்ல உபதேசங்களைக் கேட்பதும்
இதுவே மங்கலகரமான வாழ்வுக்கு வழி.

விரதமும் உடல் தூய்மையும்
நான்கு தெய்வீக உண்மைகளின் பொருள் விளங்கி
மனம் சாந்தி பெறுவதும்
இதுவே மங்கலகரமான வாழ்வுக்கு வழி.

துன்பம் வருங்கால் கலங்காத மனமும்
மனத்தூய்மையும்
மன உறுதியும்
இதுவே மங்கலகரமான வாழ்வுக்கு வழி.

இவ்வாறு வாழ்வோர் எங்கும் தோல்வியுறார்.
அவருக்கு எங்கும் வெற்றி;
இங்கும் வெற்றி, அடுத்த உலகிலும் வெற்றி.
இதுவே மங்கலகரமான வாழ்வுக்கு வழி.

பகவான் புத்தரும் திருவள்ளுவரும் மனிதர்களால் செய்ய முடியாததைச் செய்யுங்கள் என்று கூறியதில்லை. மனிதர்களால் கடைப்பிடிக்க முடியாத ஒன்றைக் கடைப்பிடியுங்கள் என்று கூறியதில்லை. மனிதர்களால் நடக்க முடியாத ஒரு பாதையைக் காண்பித்து அப்பாதையில் நடவுங்கள் என்று கூறியதில்லை.

ஆகவே, உங்கள் பகவான் புத்தரும் திருவள்ளுவரும் கூறிய இல்வாழ்க்கையின்படி வாழ்ந்திர்களேயானால் உங்கள் வாழ்க்கையும் மங்கலகரமாக அமையும்.

****** ****** ******

# <u>மற்ற வெளியீடுகள்</u>

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்